www.lkedu.lk

தமிழ்ச் சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

Tamil Association - University of Peradeniya

கல்வி பொதுத்தராதரப்பத்திர (உயர்தர) மாணவர்களுக்கான உதவிக்கருத்தரங்கு - 2020

சுட்டெண்:..... இந்திய வரலாறு II தொகுப்பு- சு.ஷியீவன்

காலம்- 1மணி Indian History II விடுகை வருடம்

25 | T | II

பேராதனைப் பல்கலைக்கழகம்

அறிவுறுத்தல்கள்

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **B,C பகுதிகளிலிருந்து ஒவ்வொரு வினாக்களையேனும் தெரிவு செய்து முதலாம் வினா உட்பட B,C பகுதிகளிலிருந்து 3 வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக 4 வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி – A

1) கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் உமக்கு வழங்கப்பட்டுள்ள உலக புறஉருவப்படத்திலே குறித்து பெயரிடுக.

1. பாடலிபுத்திரம்
2. காந்தாரம்
3. விந்தியமலை
4. கள்ளிக்கோட்டை
5. லோதல்
6. அமராவதி
7. கிருஷ்ணாநதி
8. கைபர் கணவாய்
9. பியஸ்
10. கன்னோசி
11. கங்கை கொடை சோழபுரம்
12. நர்மதை

பகுதி - B

2) இந்தியாவின் வடக்கிலுள்ள மலைகள் மற்றும் கணவாய்கள் இந்திய வரலாற்றில் செல்வாக்கு செலுத்திய விதத்தினை நுணுகி பரிசீலனை செய்க.

(16புள்ளிகள்)

3) சோழப்பேரரசினை விஸ்தரிப்பதற்கும் நிலை நிறுத்தி கொள்வதற்கும் இராஜேந்திர சோழன் மற்றும் 1ம் இராஜ இராஜன் மேற்கொண்ட நடவடிக்கைகளை பரீசிலனை செய்க.

(16புள்ளிகள்)

4) ரிக்வேதகால மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் மற்றும் அவர்களின் வாழ்வியற் கோலங்களினையும் நுணுகி ஆராய்க.

(16புள்ளிகள்)

5) மௌரியப் பேரரசின் தலைசிறந்த பேரரசன் அசோகன் ஆவான்.
   1. அசோக தர்மத்தின் உள்ளடக்கத்தினை சுருக்கமாக குறிப்பிடுக.
   2. அசோகனது அரசியல், பண்பாட்டு சாதனைகளின் அடிப்படையில் மேலுள்ள கூற்றை நுணுகி ஆராய்க.

(4+12=16புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி-C

6) பின்வரும் தலைப்பின் கீழ் நுணுகி ஆராய்க.
   1. குஷாண அரசு வரலாற்றிலே பௌத்த பண்பாட்டு வளர்ச்சி.
   2. சாதவாகன அரசின் அரசியல் மற்றும் பொருளாதாரம்.

(8×2=16புள்ளிகள்)

7) குப்த பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களை விளக்குக.

(16 புள்ளிகள்)

8) பாலரது ஆட்சியில் பண்பாட்டு வளர்ச்சியின் முக்கியத்தவத்தை பரிசீலனை செய்க.

(16புள்ளிகள்)

9) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1. சாதவாகனர் காலத்தில் கலையும் கட்டிடக்கலை சிறப்பும்
   2. கூனர் படையெடுப்பு
   3. குப்தர்கால கல்வியும் இலக்கியமும்
   4. மௌரியர் கால நிர்வாகம்
   5. கண இராச்சியங்களின் நிர்வாக நடவடிக்கைகள்

(8×2=16புள்ளிகள்)

www.lkedu.lk

தமிழ்ச் சங்கம்